# ஓம் ஸ்ரீ சாயிராம்
# வினா விடை நேரம்
# வினா எண் 304
# சுய விருப்பம் மற்றும் விதி பயனிலிருந்து தப்புவது எவ்வாறு

கேள்வி:
ஸ்வாமி இன்று அனைவரும் சுதந்திரமாக செயல்படும் சுய விருப்பம் பற்றி பேசுகின்றனர்.
மனிதர்களுக்கு உண்மையிலேயே சுய விருப்பம் என்ற ஒன்று இருக்கமுடியுமா?

நம் அன்புக்குரிய பகவான் பதிலளிக்கிறார்:

மனிதன் சுய விருப்பம் அல்லது சுய புத்தியுடன் செய்படுவது கிடையாது.

எப்போதும் புலன்களின் பின்னால் சென்று புலன்களுக்கு அடிமையாக இருக்கும் மனிதனுக்கு சுய புத்தி என்பது எப்படி இருக்க முடியும்.

கடவுள் மட்டுமே சுதந்திரமானவராக உள்ளதால் அவருடைய சங்கல்பம் மட்டுமே அனைத்தையும் தீர்மானிக்கின்றது.
இந்த சுய விருப்பம் என்பது முழுவதுமாக ஓர் தெய்வீக பண்பாகும்.

உதாரணத்திற்கு ஒரு மனிதன் பக்கவாத நோயால் பாதிக்கப்படுகிறான்.பாதிக்கப்பட்ட அந்த பகுதி அசைக்ககூட முடியாமல் முடங்கி விடுகிறது.
இப்போது அவன் முழு சுதந்திரமாக சுய விருப்பம் கொண்டு உடலின் அந்த பகுதியை அசைக்க முயன்றால் நடந்துவிடுமா.
இது நகைப்புக்குரியதல்லவா.
எனவே மனிதன் சுய விருப்பத்துடன் செயல்படுவதாக சொல்வது சரியல்ல.

கேள்வி:ஸ்வாமி தற்கால சமுதாயத்தில் எதுவுமே முழுமையாக அறிந்து கொள்ளபடாமல் அரைகுறையாகத்தானே புரிந்து கொள்ள படுகிறது.எனவே எங்களுக்கு சுய விருப்பம் என்பதற்கும் தெய்வீக சங்கல்பம் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை தயவுசெய்து தெளிவு படுத்துங்கள் ஸ்வாமி

நம் பகவான் கூறுகின்றார் அகந்தை மற்றும் அறியாமையினால்தான் இது போன்ற சந்தேகங்கள் உங்களுக்கு தோன்றுகின்றன.

மேலும் நீங்கள் உடலோடு மட்டுமே உங்களை தொடர்பு படுத்தி கொள்வதால் உங்களால் சத்தியத்தை உணர முடிவதில்லை.
உண்மையில் நீங்கள் உங்கள் புலன்களுக்கு முற்றிலுமாக அடிமையாகி இருக்கின்றீர்கள்
முதலில் நீங்கள் சுதந்திரமானவ ர்களாகவே இல்லையே.
அப்படி இருக்கும் போது சதந்திரமான சுய விருப்பம் உங்களுக்கு எப்படி இருக்க முடியும்.

கடவுள் ஒருவரே முற்றிலும் சுதந்திரமானவர்
அவருக்கு மேற்பட்டு எவரும் இல்லை.
அவரே அனைத்திற்கும் எஜமானர் எனவே அருடைய விருப்பமே தெய்வீக சங்கல்பமாகிறது.

ஆனால் இன்றோ ஒவ்வொருவரும் தங்களுக்கு சுதந்திரமான சுய விருப்பம் உள்ளதாகவும் அந்த சுய புத்தியின்படியே தாங்கள் செயல்படுவதாகவும் கூறிக்கொள்கிறார்கள்.
மனிதர்களின் இந்த சுய புத்தி என்பது ஸ்திரமாக இல்லாமல் மாறிகொண்டே இருக்கிறது.
ஆனால் தெய்வீக சங்கல்பம் என்பது மாறுபடாமல் நிலையாக இருக்கின்றது.

நீங்கள் சுய விருப்பத்துடன் செயல்படும்போது அதில் வெற்றியும் பெறலாம் அல்லது தோல்வியும் அடையலாம்.வெற்றி பெரும்போது பெருமையும் அகந்தையும் உண்டாகிறது.
தோல்வியினால் வெறுப்பும் ஏமாற்றமும் மிஞ்சுகிறது.
ஆனால் தெய்வீக சங்கல்பமோ விருப்பு வெறுப்பை எல்லாம் கடந்து நிலைத்து நிற்பதாகும்.

இதில் நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் தெய்வத்திடம் முழுமையாக சரணாகதி அடைவதுதான்.
இதன் அர்த்தம் என்னவென்றால் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் இவையனைத்தும் இறைவனின் பிரசாதமாகவே அதாவது இறைவனின் சங்கல்பபடியே நடப்பதாக ஏற்று கொள்ள வேண்டும்.
இதுவே பக்தியின் உயர்ந்த நிலையான ஞான நிலை என்பதாகும்.
சொல்ல போனால் உங்களுக்கு என்ன தர வேண்டும் எப்பொழுது தர வேண்டும் என்பதெல்லாம் இறைவனுக்கு தெரியும்.

எல்லாமே கடவுளின் சங்கல்பபடியே நடக்கின்றன.

இதை நீங்கள் நன்கு உணர்ந்து கொண்டால் எப்போதுமே நீங்கள் தற்பெருமை அகந்தை விரக்தி மனசோர்வு துக்கம் போன்றவைகளால் துன்பபட மாட்டீர்கள்.

தெய்வீக சங்கல்பம் என்பது உங்கள் அக உணர்வாக உள்ளுணர்வாக உங்களுக்கு உள்ளேயே இருக்கிறது.
ஆனால் அதை நீங்கள் உணர்வதற்குகூட முயற்சி செய்யாமல் புறக்கணிக்கின்றீர்கள்.
வெளிஉலகில் அலைபாய்ந்து கொண்டிருக்கும்
உங்கள் மனதை நீங்கள் உள் புறமாக திரும்பும்போது உங்கள் புத்தி உங்களுக்கு உள்ளேயே இருக்கின்ற தெய்வீக அக உணர்வின் மீது பதிகின்றது.அப்போது வெளியே சுற்றி திரிந்து கொண்டிக்கும் உங்கள் புலன்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகின்றன.
அங்கே நீங்கள் உங்கள் உள்ளிருந்து ஒலித்துக் கொண்டிருக்கும் தெய்வத்தின் குரலை தெளிவாக கேட்க முடியும்.

வேறொரு சமயத்தில் நம் பகவானிடம் பின்வரும் கேள்வி கேட்கபடுகிறது.
ஸ்வாமி நம் வாழ்க்கையில் எல்லாமே நமது முந்தைய கர்ம வினை படி தான் நடக்கும் என்றும் அதனால் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவங்களும் நிகழ்வுகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டவை என்றும் கூறப்படுகிறதே.
இந்த கர்ம வினை பயன்களிலிருந்து தப்புவது எப்படி

இதற்கு நம் பகவான் கூறுகின்ற பதிலை இங்கே பார்ப்போம்.

இந்த பிறவியில் உங்களுக்கு நடக்கின்ற சம்பவங்கள் எல்லாம் முந்தைய பிறவிகளிலே உங்கள் மனதில் தோன்றிய எண்ணங்கள் மற்றும் செயல்களின் பிரதிபலிப்பே ஆகும்.
நீங்கள் செய்கின்ற தீய செயல்கள் யாராலும் கவனிக்கபடுவதில்லை என்று நீங்கள் மகிழ்கிறீர்கள்.
ஆனால் உங்களுக்கு உள்ளே அக உணர்வாக இருக்கின்ற தெய்வீகம் உங்கள் மனதில் தோன்றுகின்ற எண்ணங்கள் உணர்வுகள் மற்றும் உங்கள் செயல்கள் அனைத்தையும்அறிந்தவராக இருக்கிறார்.
அவரிடமிருந்து எதையுமே நீங்கள் மறைக்க முடியாது.உங்களின் தீய செயல்களுக்கான எதிர் விளைவுகளை நீங்கள் சந்தித்தே ஆகவேண்டும்.
இந்த பிறவியில் நீங்கள் அனுபவிக்கிற துன்பங்களுக்கு எல்லாம் நீங்கள் வேறு ஒருவரை காரணம் சொல்கிறீர்கள்.
இது முற்றிலும் தவறானது.
உங்களின் துன்பங்களுக்கு நீங்கள் முந்தைய பிறவிகளிலே செய்த தீய செயல்களே காரணமாகும்.

கடவுள் ஒவ்வொரு மனிதனிடத்திலும் அவனது மனதில் தோன்றுகின்ற எண்ணங்களின் சாட்சியாக தெய்வீக உள்ளுணர்வாக உறைகின்றார்.
கடவுள் இந்த உலகை சிருஷ்டி செய்து அதில் மனிதனை படைத்தபோது ஒரு நிபந்தனை விதித்தார்.
மனிதன் தன்னுடைய செயல்களுக்கான விளைவை தானே சந்தித்தாகவேண்டும் என்பதே அது.

கடவுள் ஒரு தபால்காரர் போல.
கடிதங்களை உரியவரிடம் சேர்ப்பது மட்டுமே அவர் வேலை.
கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களுக்கு அவர் பொறுப்பல்ல.

தபாலில் ஒரு திருமண அழைப்பிதழ் வந்தால் அந்த தபால்காரருக்கா வெகுமதி அளிக்கபோகிறீர்கள்.
அல்லது ஒரு மிரட்டல் கடிதம் வந்தால் அந்த தபால்காரரையா குற்றம் சொல்வீர்கள்.
தபால்காரரின் வேலை தபாலை உரியவரிடம் சேர்ப்பது மட்டுமே அல்லவா.

ஆனால்
இந்த இடத்தில் நீங்கள் ஒன்றை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். இறைவனிடத்தில் மனமார பிரார்தனை செய்தால் அது தீய வினை பயன்களால் ஏற்படுகின்ற துயரங்களை தாங்கி கொள்வதற்கு உண்டான மன உறுதியை உங்களுக்கு அளிக்கின்றது

தவறுகளுக்கு மனம் வருந்தி திடமான நம்பிக்கையடனும் பக்தியுடனும் கடவுளின் கருணையை வேண்டி அடி மனதின் ஆழத்திலிருந்து பிரார்திக்கும்போது அது எப்பேர்பட்ட பாவ வினை விளைவுகளையும் பொடி பொடி ஆக்க வல்லது.
அது தெய்வத்தின் சட்டங்களையே மாற்றி கடவுளின் அன்புக்கு உங்களை தகுதி பெற செய்கிறது.
உதாரணமாக மார்கண்டேயனை எடுத்து கொள்ளுங்கள்.
தெய்வீக சட்டத்தின் படி அதாவது விதி படி அவன் பதினாறு வயதில் இறக்க வேண்டும்.
ஆனால் அவன் சிவபெருமானிடம் தீவிர பக்தியுடன் சரணமடைந்து செய்த பிரார்தனையினால் அவனுடைய விதி மாற்றபட்டு சிவபெருமான் அவனை சிரஞ்சீவியாக வாழ வைத்தார்.

ஒரு குற்றவாளி சட்டத்தின் படி தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கபடுகிறார் என்று வைத்து கொள்ளுங்கள்.

அவர் சிறையின் சட்டங்களுக்கு கட்டுபட்டு நல்லவிதமாக நடந்து கொண்டால்
அந்த நன்நடத்தைக்காக அவரின் தண்டனை காலம் குறைக்கபடுகிறது அல்லவா.

இன்னொரு விதமாகவும் சிந்திக்கலாம்.
மரண தண்டனை பெற்ற ஒருவர் தன்னை விடுவிக்க கோரி கீழ் கோர்டிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை விண்ணப்பித்த போதும் அது நிராகரிக்கப்படுகிறது.
ஆனால் மாண்புமிகு இந்திய ஜனாதிபதி அவர்கள் கருணை அடிப்படையில் சிறப்பு காரணங்களுக்காக அவரை விடுவிக்கலாம் அல்லவா.

அது போலவே உங்கள் கர்ம வினையின் விளைவாக நீங்கள் கடுமையான துன்பங்களையும் துயரங்களையும் இந்த பிறவியில் அனுபவிக்க வேண்டும் என்பது தெய்வீக சட்டமாக அதாவது உங்களுக்கான விதியாக இருந்தாலும் செய்த பாவங்களுக்காக உண்மையாக மனம் வருந்தி இனி அது போல் தவறுகள் செய்யமாட்டேன் என்று மன்னிப்பு கோரி கடவுளிடம் அன்புடன் நம்பிக்கையுடன் தீவிரமாக பிரார்த்தனை செய்தால் கடவுள் இரக்கம் கொண்டு கர்ம வினை தாக்குதலின் பாதிப்பை கட்டுபடுத்தியோ அல்லது முற்றிலுமாக அகற்றியோ கர்மாவிலிருந்து உங்களை காப்பாற்றுவார்.
நன்றி
ஜெய் சாயிராம்.